| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.சுப்ரமணியன்<br>த/பெ.திரு.கருப்பணன் | அ.வ.எண். 144/2016 | 17.06.2026 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) எனது வழக்குரையில் சொத்து விவரத்தை வழக்கு சொத்தில் எவ்வளவு நீள, அகலத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் என் பெயரில் இல்லை என்றால் சரிதான், ஆனால் பட்டாவிற்கு மனு செய்துள்ளேன். வழக்கு சொத்தை பொறுத்து பாக பிரிவினை வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்றால் இலால்குடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2) முத்துசாமி உடையாருக்கு வழக்கு சொத்து ஆதியில் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, வழக்கு சொத்து உள்ள புல எண்ணில் 2 1/2 சென்ட் மட்டுமே பாத்தியப்பட்டிருந்தது. என் மூதாதையருக்கு வழக்கு சொத்து உள்ள புல எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை தவிர வழக்கு சொத்து தொடர்பாக வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது.

3) என்னிடம் உள்ள மேற்படி ஆவணங்களை பார்த்தால் வழக்கு சொத்து 3 அடி சந்து உள்ளதா என்பதும் அது யாருடையது என்பதும் தெரிய வரும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல்

செய்தால் வழக்கின் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான், அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதி, மாதம், வருடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கட்டுமானங்கள் அவருக்கு சொந்தமான புல எண்.276/3A ல் தான் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண்.276/3A சொத்திற்கும், எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு எனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். பெரியம்மாள் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் அத்தை. அவருக்கு வாரிசுகள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பெரியம்மாள் எனக்கு ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி பெரியம்மாளுக்கு நான் வாரிசு என்பதற்கு ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

5) வழக்கு சொத்து எனக்குரிய சொத்து அல்ல என்றாலும், வழக்கு சொத்தைப் பொறுத்து பாக பிரிவினை வழக்கு நடைபெறுவதை மறைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரியான தரப்பினர்களை சேர்க்காமல் ஏற்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1 பாக பிரிவினை ஆவணம் சட்டபடி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2026.06.20 05:09:46 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.